DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.34/2023**

**2024-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 10- ம் நாள் செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 10 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 10 | தொழில் | - | தொழிலாளர் |
| பெயர் | - | முருகன் | வட்டம் | - | வால்பாறை |
| த/பெ | - | செல்வராஜ் | சமயம் | - | |
| கிராமம் | - | பன்னிமேடு பேட்ரி டிவிசன் | வயது | - | 56/2024 |
| சாதி | - | | | | |

**<u>10.12.2024</u>**

**( எதிரி ஆஜர்)**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து எஸ்டேட்டில் கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 சுப்பிரமணியன் என்பவரை தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். அ.சா.1 க்கும் எதிரிக்கும் இடையே என்ன சம்பவம் நடைபெற்றதுஎன்று தெரியாது. நான் எந்த சம்பவமும் பார்க்கவில்லை. அவர்களுக்குள் சண்டை என்று கேள்விப்பட்டேன் அது என்ன பிரச்சனை என்று தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

கடந்த 24-05-2023-ம் தேதி ஆஜர் எதிரி காலையில் குடித்துவிட்டு சுப்பிரமணியசுவாமிக்கு முன்பாக அசிங்கமாக பேசிக்கொண்டிருந்தார் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் மாலை 03.00 மணிக்கு அவரது மாமா சுப்பிரமணியனிடம் தகவல் சொல்லவே சுப்பிரமணியன் ராஜாவின் வீட்டிற்கு வந்து தருமலிங்கத்தை தட்டி கேட்டார் என்றுசொன்னால் சரியல்ல. அப்போது எதிரி ராஜாராம் வீட்டு முன்பு வந்து அ.சா1-யை பார்த்து அசிங்கமான வார்த்தைகளால் திட்டிக்கொண்டே ஓடிவரும்போதே வீட்டின் முன்பு இருந்த தடுப்பில் கால் இடறி அவராகவே கீழே விழுந்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் எழுந்து எதிரி பாக்கெட்டில் வைத்திருந்த கத்தியை எடுத்து அ.சா.1 னை வலது கையில் குத்திவிட்டார் என்றுசொன்னால் சரியல்ல. அதில் அ.சா.1 க்கு வலது கையில் புஜத்தில் ரத்தக்காயம் ஏற்ப்பட்டது என்று சொன்னால் சரியல்ல இதை பார்த்துக்கொண்டிருந்த நானும், பவித்திரா, நந்தினி, சரஸ்வதி, ஆகியோர் எதிரியை சத்தம் போடவே எதிரி அ.சா.1 யை பார்த்து என்னை பற்றி புகார் கொடுத்தால் கத்தியால் குத்தி கொன்றுவிடுவேன் என்று கொலை

மிரட்டல் விடுத்தால் சரியல்ல என்றால் சரியல்ல. பின்னர் காயம்பட்ட அ.சா.1 னிற்கு நந்தினி என்பவர் கையில் கட்டுபோட்டுவிட்டார் என்றால் சரியல்ல. பின்னர் அ.சா.1 யை ராஜாராமும், பவித்திராவும் சேர்ந்து வண்டியில் ஏற்றி பன்னிமேடு எஸ்டேட் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்று சொன்னால் சரியல்ல. பின்னர் அ.சா.1 மேல் சிகிச்சைக்காக வால்பாறை அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டார் என்றுகேள்விப்பட்டேன் என்று சொன்னால் சரியல்ல சம்பவம் குறித்து அ.சா.1 புகார் அளித்ததின் பேரில் போலீசார் என்னை விசாரித்தார்கள் என்று போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம் எதிரிக்கு பயந்து எதிரிக்கு ஆதரவாகவும் அரசுதரப்பிற்கு எதிராகவும் பிறழ் சாட்சியாக மாறி சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.